4. அரசினர் சட்ட முன்வடிவு.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

***திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 21 ஆம் தேதியன்று இரு அவை களும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

டாக்டர் கே. சமரசம் : வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர் களே, நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்—

***திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பினைத் தந்தமைக்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

---

* 212-216 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

* 217-222 ஆம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப்பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.